(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 39 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, நவெம்பர் 11, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0106 / '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்று நாட்டில் நுகரப்படும் செத்தல் மிளகாயின் மொத்த அளவு என்ன என்பதையும்,

(ii) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அளவையும் வெளிநாட்டிலிருந்து இறக்கமதி செய்யப்படும் அளவையும் தனித்தனியாகவும்,

(iii) கடந்த 20 வருடங்களாக அதன் சில்லறை விலை என்ன என்பதையும்,

(iv) நுகர்வோருக்கு ஏற்பட்டுள்ள சுமையை குறைப்பதற்காக மானியம் ஏதாவது வழங்கப்பட்டதா என்பதையும்,

(v) அப்படியாயின் இன்றுவரை எவ்வளவு வழங்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட செத்தல் மிளகாய், எதுவாக இருந்தாலும் அது நுகர்வோரை சென்றடையும் வரை அதன்மீது விதிக்கப்படும் சகலவிதமான வரிகளும் இன்றுள்ளவாறு எவ்வளவு என்பதை தனித்தனியாக அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0107 / '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்று நாட்டில் நுகரப்படும் தகரத்திலடைக்கப்பட்ட மீனின் மொத்த அளவு என்ன என்பதையும்,

(ii) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அளவையும், வெளிநாட்டிலிருந்து இறக்கமதி செய்யப்படும் அளவையும் தனித்தனியாகவும்,

(iii) கடந்த 20 வருடங்களாக அதன் சில்லறை விலை என்ன என்பதையும்,

(iv) நுகர்வோருக்கு ஏற்பட்டுள்ள சுமையை குறைப்பதற்காக மானியம் ஏதாவது வழங்கப்பட்டதா என்பதையும்,

(v) அப்படியாயின் இன்றுவரை எவ்வளவு வழங்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தகரத்திலடைக்கப்பட்ட மீன், எதுவாக இருந்தாலும், அது நுகர்வோரை சென்றடையும் வரை அதன்மீது விதிக்கப்படும் சகலவிதமான வரிகளும் இன்றுள்ளவாறு எவ்வளவு என்பதை தனித்தனியாக அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0108 / '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்று நாட்டில் நுகரப்படும் கோதுமையின் மொத்த அளவு என்ன என்பதையும்,

(ii) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அளவையும், வெளிநாட்டிலிருந்து இறக்கமதி செய்யப்படும் அளவையும் தனித்தனியாகவும்,

(iii) கடந்த 20 வருடங்களாக அதன் சில்லறை விலை என்ன என்பதையும்,

(iv) நுகர்வோருக்கு ஏற்பட்டுள்ள சுமையை குறைப்பதற்காக மானியம் ஏதாவது வழங்கப்பட்டதா என்பதையும்,

(v) அப்படியாயின் இன்றுவரை எவ்வளவு வழங்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை, எதுவாக இருந்தாலும், அது நுகர்வோரை சென்றடையும் வரை அதன்மீது விதிக்கப்படும் சகலவிதமான வரிகளும் இன்றுள்ளவாறு எவ்வளவு என்பதை தனித்தனியாக அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0225 / '08

4.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுற்றுலாத்துறை (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0226 / '08

5.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாராளுமன்ற அலுவல்கள் (அமைச்சரவை)அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0227 / '08

6.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தொடர்பாடல், தகவல் (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோக பூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0567 / '08

7.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலன்னாவை பிரதேச செயலகத்தில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்று கின்ற நிறைவேற்று அதிகார தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களது பதவிகள் யாவையென்பதையும்,

(iii) கொலன்னாவை பிரதேச செயலகத்தில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்று கின்ற நிறைவேற்று அதிகார தரத்தைச் சேராத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) அவர்களது பதவிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கொலன்னாவ பிரதேச செயலகத்தில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்று கின்ற ஏனைய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களது கடமைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0568 / '08

8.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாதுக்க பிரதேச செயலகத்தில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற நிறைவேற்று அதிகார தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களது பதவிகள் யாவையென்பதையும்,

(iii) பாதுக்க பிரதேச செயலகத்தில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற நிறைவேற்று அதிகார தரத்தைச் சேராத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) அவர்களது பதவிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பாதுக்க பிரதேச செயலகத்தில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற ஏனைய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களது கடமைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0569 / '08

9.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலன்னாவை நகரசபையில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற நிறைவேற்று அதிகார தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களது பதவிகள் யாவையென்பதையும்,

(iii) கொலன்னாவை நகரசபையில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற நிறைவேற்று அதிகார தரத்தைச் சேராத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) அவர்களது பதவிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கொலன்னாவை நகரசபையில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற ஏனைய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களது கடமைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0587 / '08

10.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதியன்றுள்ளவாறு நாட்டின் மொத்தக் கடன் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் வெளிநாட்டுக் கடன்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) கடந்த மாதத்தில் அதாவது 2008.04.30 ஆந் திகதியன்றிருந்த வெளிநாட்டுக்கடன் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அதன்படி ஒரு மாதத்திற்குள் அதிகரித்த கடன் தொகை எத்தகைய செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0593 / '08

11.

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் மொனராகலை மாவட்டத்தில் இருந்த -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதற்கு பின்னர் தற்போது மொனராகலை மாவட்டத்தில் உள்ள -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0598 / '08

12.

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் கண்டி மாவட்டத்தில் இருந்த -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதற்கு பின்னர் தற்போது கண்டி மாவட்டத்தில் உள்ள -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0599 / '08

13.

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் நுவரெலியா மாவட்டத்தில் இருந்த -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதற்கு பின்னர் தற்போது நுவரெலியா மாவட்டத்தில் உள்ள

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0595 / '08

14.

கௌரவ எல். ஜீ. வசந்த பியதிஸ்ஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் அம்பாறை மாவட்டத்தில் இருந்த -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதற்கு பின்னர் தற்போது அம்பாறை மாவட்டத்தில் உள்ள -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0596 / '08

15.

கௌரவ எல். ஜீ. வசந்த பியதிஸ்ஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதற்கு பின்னர் தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## **பிரேரணை முன்னறிவித்தல்**

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— சிறப்புரிமை,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன அவர்கள், தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2007 நவெம்பர் மாதம் 28 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப் படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) — (ஒதுக்கப்பட்ட நான்காம் நாள்) - விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (நவெம்பர் 06) [1].

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம்

2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515-12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் ரூ. 58,915 சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து ரூ. 58,915 மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 4(8) ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உபதவிசாளரினதும் சம்பளம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உப தவிசாளர்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 50,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 62,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் ஆணைக்குழுவின் உப தவிசாளர் பதவியில் பணியாற்றியுள்ள பேராசிரியர் லால் பெரேரா அவர்களுக்கும் தற்போது அப்பதவியை வகித்துவரும் கலாநிதி ஜீ. டி. குணவர்தன அவர்களுக்கும் இச்சம்பள அதிகரிப்பு ஏற்புடையாதாக வேண்டுமெனவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உப தவிசாளருக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

*10.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு” — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **II** இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **III** இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **IV** இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல்V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறபட்டுள்ளது.)

*11.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*12.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*13.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*14.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*15.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*16.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*19.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*20.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*23.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*24.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*25.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*26.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*27.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*28.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*29.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

30.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

உலக பௌத்த மகா சம்மேளனத்தின் இலங்கைப் பிரதேச நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.